# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 9 செப்டம்பர்-2005




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. சாத்தான் இருப்பதாக நாம் ஏன் நம்புகிறோம்? ..... 11
3. பெண்கள் பகுதி ........ 17
4. வாலிபர் பகுதி ........ 22
5. சிறுவர் பகுதி ........ 26
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 29

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

S. Rajanayagam
**Editor**

J.C. Choate
**Honorary Editor**

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 18 September - 2005 Issue - 9**


ஆசிரியர் உரை

## இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நாள் முதற் கொண்டு நாம் வாழும் இப்பூமி பற்பல நிகழ்வுகளை அவ்வப்போது கண்டு வந்துள்ளது. அந்நிகழ்வுகள் சரித்திர ரீதியாக நடந்திருக்கலாம், பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கலாம், அரசியல் ரீதியாக நடந்திருக்கலாம். இன்னும் அவை ஆன்மீக ரீதியாகக் கூட உண்டாயிருக்கலாம். ஆனால், அப்படி நடந்த எல்லா நிகழ்வுகளுக்கும் ஜனங்களும், சரித்திரமும் சமமான முக்கியத்துவம் கொடுத்துவிடவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நாம் பூத கண்ணாடி வைத்துத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், ஒரு நிகழ்வு முக்கியமானதா அல்லது முக்கியமற்றதா, ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா, சரித்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா அல்லது தள்ளப்பட்டிருக்கிறதா என்பது பல அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், ஒரு நிகழ்வு எந்தக் காலகட்டத்தில் நடந்தது. அந்நிகழ்வில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார், அந்நிகழ்வால் உண்டான பாதிப்பு எப்படிப்பட்டது, அது ஏற்படுத்திய தாக்கம் எந்தளவு உள்ளது அந்நிகழ்வால் விளைந்த நன்மை, தீமைகளின் அளவு என்ன என்பன போன்ற பல காரியங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்பிறகே அதன் முக்கியத்துவம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு நிகழ்வும் பார்க்கப்பட்டு அதற்கான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால், சில நேரங்களில் சில நிகழ்வுகள் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடப்பட்டு, அதன் முக்கியத்துவம் கண்டும் காணாமலும் விடப்பட்டுள்ளது. இதற்கான மிகச்சிறந்த உதாரணம், முதல் நூற்றாண்டில் நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் சம்பந்தப்பட்ட காரியங்களே. அவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், அவர் உயிர்த்தெழுந்த பின்னான நாட்களிலும், அவர் பற்றிய காரியங்கள் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களாலும், மதத்தலைவர்களாலும் திட்டமிட்டு அமுக்க முயற்சிக்கப்பட்டது. அதிலே அவர்கள் வெற்றி பெற முடியவில்லை என்பது வேறு விஷயம். ஆனால் இதுதான் நடந்த உண்மை. இப்படி மறைக்க முயற்சிக்கப்பட்ட, பகிரங்கமான உண்மை பற்றிதான் மாமனிதனாகிய அப்போஸ்தலன் பவுல், ஒரு சமயம் அகிரிப்பா ராஜாவினிடத்தில், மூடி மறைப்பதற்கு இது ஒன்றும் "**ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல**" என்று சத்தமாகக் கூறினார்.

சரி பவுலடியார் இதை எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னனியைக் கொஞ்சம் பார்த்துவிடுவோம்.

மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்ட பவுல், தனது மூன்றாம் பயணத்தை முடித்துக் கொண்டு எருசலேமுக்கு வந்து சேர்ந்தார் (அப் 21:18) அங்கு அப்போஸ்தலர்களின் ஆலோசனையின் பேரில் சில யூதமார்க்க சம்பிரதாயங்களை முடித்த நிலையில் (21:26) ஆசியா நட்டிலிருந்து வந்த யூதர்களால் பிரச்சினை ஏற்பட்டு காரியம் கைமீறிப்போனது (அப். 21:27-31). பிறகு சேனாதிபதியின் தலையீட்டின் பேரில் காப்பாற்றப்பட்டு கோட்டைக்குள் எப்படியோ கொண்டு போகப்பட்டான் (32-34). அதன் பிறகு அவன் ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உத்தரவு சொல்லுகையில் கலகம் உண்டானதினால் மீண்டும் கோட்டைக்குள் கொண்டு போகும்படி சேனாதிபதி லீசியா கட்டளையிட்டான் (23:10) ஆனால், அவன் மீது குற்றம் சாட்டினவர்களோ, "**தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும், புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டு**" சரியான சமயத்துக்குக் காத்திருந்தார்கள் (அப். 23:12,13) இக்கொலை சதிக்கு யூதமத உயர் அமைப்பான ஆலோசனைச் சங்கத்தாரும் உடந்தையாயிருந் திருக்கிறார்கள் (23:15) என்பது கேட்பதற்கே எப்படியோ உள்ளது!

ஆனால், இந்த சதியாலோசனை அரசல் புரசலாக பவுலின் சகோதரியின் மகனுக்குத் தெரியவந்தது. பிறகு பவுல் வழியாக சேனாதிபதியாகிய லீசியாவின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்த போது, அவன் சாதுரியமாகச் செயல்பட்டு தேசாதிபதி பேலிக்ஸிடம் மேற்கொண்டு விசாரிக்கப்பட அனுப்பி வைத்தான். ஆனால், இந்த உல்லாசப் பிரியனாகிய பேலிக்ஸ் எது நியாயம், எது நீதி என்று தெரிந்துகொள்ள முயற்சிக்காமல், பணத்தாசை பிடித்தவனாக இருந்து, பணத்தைப் பெற்றுக்கொண்டு நீதியின் குரல் வளையை நெறிக்க ஆயத்தமாக இருந்தான். இங்கே வசனத்தைக் கவனியுங்கள். மேலும், அவன் பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு **அவன் பணம் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து அவனுடனே பேசினான்** (24:26) சத்தியவானாகிய பவுல், தன் நம்பிக்கைக்காக எப்படிப்பட்ட இழி பிறவிகளுக்கு முன்பாகவெல்லாம் போய் நிற்க வேண்டியிருந்துள்ளது பாருங்கள்.!

இந்த பேலிக்ஸை அடுத்து, ஒரு தேசாதிபதி வந்தான், அவன் பெயர் பெஸ்து. இவனாகிலும் நல்லவனா என்று பார்த்தால் அங்கும் பவுலுக்கு ஏமாற்றமே. ஆம், இந்த ஆளுநர், பவுலின் மீது சாட்டப்படுகின்ற அநேகங் கொடிய குற்றச் சாட்டுகளின் பின்னணியையும், சாட்டுகிற மனிதர்களின் உள்நோக்கத்தையும் புரிந்துகொள்ளாமல், **யூதர்களுக்கு தயவு பண்ண மனதாய், விசாரிக்கப்பட எருசலேமுக்கு வர உனக்கு சம்மதியா என்று கேட்டான்.** (25:7-9) விசாரணை என்ற பெயரில் பின்னப்பட்டிருக்கும் சதி வலையை கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட பவுல் மிகுந்த ஞானமாக "**நான் இராயனுக்கு அபயமிடுகிறேன்**" என்றான். நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதே சாக்கு என்பது போல "**நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாய்**" என்று உத்தரவு சொன்னான் இந்த பெஸ்து . தன் பொறுப்பை உணர்ந்து, கடமையாற்றத் தெரியாத கையாலாகாத மனிதனெல்லாம் அன்றைக்கு நாற்காலியில் அமர்ந்திருந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாகவும் பவுல் நிற்கவேண்டியதொரு நிலை. எவ்வளவு கடுமையான சூழ்நிலைகளையெல்லாம் பவுல் சத்தியத்தினிமித்தமும், ஊழியத்தினி மித்தமும் கடந்து வந்துள்ளார் பாருங்கள்.

பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் விருந்தாளிகளாக பெஸ்துவைக் கண்டு கொள்ளும்படி வந்தனர். பவுலைப்பற்றி பெஸ்து மூலமாய் கேள்விப்பட்ட அகிரிப்பா, அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான் (25:22) "தர்ம அடி" என்பது போல, பவுல் "தர்ம விசாரணை"

செய்யப்படுகிறான். இருப்பினும் அகிரிப்பாவிற்கு முன்பாக விசாரணைக் கைதியாக நிற்பதில் பவுலுக்குக் கொஞ்சம் திருப்தி. ஏனெனில், "யூதருடைய சகல முறைமைகளையும், தர்க்கங்களையும் அவன் அறிந்திருந்தான்" (26:3) அப்படி அறிந்திருந்தபடியால் இவனிடத்திலாகிலும் நியாயம் கிடைக்காதா என்ற ஒரு நப்பாசை உள்ளூர பவுலுக்கும் இருந்திருக்கும் அப்படித்தானே! ஆகவே தான், விலாவாரியாக உத்தரவு கொடுக்கிறான். தன் சிறுவயது வாழ்க்கை, இயேசுவால் சந்திக்கப்பட்ட விதம், அந்த அழைப்புக்கு அடிபணிந்த அழகு, பிறகு கிறிஸ்துவுக்காக இவன் செய்த ஊழியம் என்று காரியங்களை வரிசையாய் அடுக்கி வாதத்தை திறமையாக எடுத்து வைத்தான். அத்தோடு, யூதர்களிடத்திலும், புறஜாதிகளிடத்திலும் தான் எதைப் பற்றி பிரசங்கித்தேன் என்பதையும் கூறுகிறார்.... **"அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக் கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்"** என்றான் (26:20) எவ்வளவு பக்தி வைராக்கியத்தோடு பவுல் பேசியிருக்கிறாரென்று பாருங்கள்.

ஆனால், அகிரிப்பா ராஜாவோடு அமர்ந்து பவுலின் வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கையாலாகாத மனிதனாகிய தேசாதிபதி பெஸ்துவுக்கோ **அது பிதற்றலாகவும், பைத்தியமாகவும்** தெரிந்திருக்கிறது." (26,24) ஆம், அவன் **"பவுலே நீ பிதற்றுகிறாய், அதிக கல்வி உனக்கு பைத்தியமுண்டாக்குகிறது என்றான்"**. தன்னை ஒருவன் பைத்தியக்காரனென்று சொன்ன நிலையிலும், நிதானம் இழக்காத பவுல், இல்லையில்லை, நான் சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்று பதிலளித்து விட்டு (26:25) இதற்கு மேல் இவனிடம் பேசிப் பயனில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அகிரிப்பா ராஜாவின் பக்கமாய்த் திரும்பி இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார். ஆகையால் தைரியமாக அவருக்கு முன்பாகப் பேசுகிறேன். இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; **இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல** என்றான் (26:26)

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று பவுல் சொன்ன போது, எவைகளை மனதில் கொண்டவராகப் பேசியிருப்பார்? தான் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆலோசனை சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டது பற்றியும், விசாரணை என்ற பெயரில் வித்தியாசமான் மனிதர்கள் முன்பாக நிறுத்தப்பட்டதையா பேசியிருப்பார்? ஒருவேளை இவைகளும் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல வென்றாலும் இவைகளைச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளும்

படியாகவா பவுல் முயன்றிருப்பார்? கண்டிப்பாக அப்படியிருக்க நியாயமில்லை. ஏனெனில், கிறிஸ்துவுக்காக தனக்கு லாபமாயிருந்தவை களையெல்லாம் நஷ்டமென்று எண்ணிய வராயிற்றே இந்தப் பவுல் (பிலி 3:7). அப்படியானால், இது மூலையிலே நடந்த காரியமல்லவென்று எதைப் பற்றித்தான் சொல்லியிருப்பார்? சொல்லுங்கள். கண்டிப்பாக, பவுலின் நம்பிக்கை நாயகராயிருந்த இயேசு பற்றிய காரியங்களைத்தான் இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லியிருப்பாரேயொழிய வேறொன்றைப் பற்றியுமிருக்காது.

இயேசு பற்றிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல. ஆம், அவருடைய பிறப்பு பற்றிய அறிவிப்பு, அவருடைய வாழ்க்கை, அவருடைய ஊழியம், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அவர் வாக்களித்துக் கட்டின சபை, அதன் ஆரம்பம், அதன் வளர்ச்சி இப்படி எதுவுமே மூலையிலே நடந்ததல்ல. எல்லாமே வெட்ட வெளிச்சமானவையே ஆயினும், இவை எல்லாவற்றையும் நாம் இங்கே பார்க்க முடியாதாகையால், ஒரு மூன்றை மாத்திரம் நமக்காக இங்கே எடுத்துக் கொண்டு சில பாடங்களைக் கற்றுக் கொள்ளுவோம்.

**I <u>கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.</u>**

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம். இயேசுவின் முதலாம் வருகை பற்றிய காரியங்கள் எதுவுமே ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

அப்போஸ்தலன் பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லும் போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையையும் மனதில் கொண்டவராகவும் பேசியிருக்க வேண்டும். எப்படியெனில், அவர் எந்த நம்பிக்கைக்காக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டாரோ அந்த நம்பிக்கைக்கு அடித்தளமே கிறிஸ்துவின் முதலாம் வருகையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் தான்.

அந்த முதலாம் வருகையின் அபாரம் பற்றி, வேதாகமம் பல ஆச்சரியமான தகவல்களை நமக்கு அள்ளிக் கொடுக்கிறது. அவருடைய பிறப்பு முதல், உயிர்தெழுதல் வரைக்குமான சகல காரியங்களும் தீர்க்கதரிசிகளால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப் பட்டு, துல்லியமாகப் பேசப்பட்டுள்ளது. ஆம், அவர் கன்னியின் வயிற்றிலே பிறப்பார், கள்வர்களுடன் மரிப்பார், ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவார் என்று ஏசாயாவும் (7:17,53:9-12), யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார் என்று மீகாவும் (5:2), எகிப்துக்குப் போவார் என்று ஓசியாவும் (11:1) முப்பது வெள்ளிக்காசுக்குக்

காட்டிக் கொடுக்கப்படுவார் என்று சகரியாவும் (11:12-13) கூறியுள்ளனர். இவைகள் போதாது என்பது போல, சங்கீதங்களிலே, அவர் காட்டிக் கொடுக்கப்படுவது (41:9) அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் உருவப்படுவது (22:16) காடியைக் குடிக்கும்படி கொடுப்பது (69:21) வஸ்திரங்களை சீட்டுப் போடுவது (22:10) எலும்புகள் முறிக்கப்படாது என்பது (34:20) மற்றும் அவர் உயிரோடே எழுப்பப்படுவார் என்பது (16:10) போன்ற பல காரியங்கள் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட காரியங்களனைத்தும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களால் முறையாக வாசிக்கப்பட்டு, ஓய்வு நாள் தோறும் போதிக்கப்பட்டவை. அவை, எந்தளவு விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதில் கொஞ்சம் மாறுபட்ட கருத்து இருந்தாலும், இவைகள் வெளிப்படுத்தப் படாதவைகளோ, இரகசியமாக வைக்கப்பட்டவைகளோ அல்லது ஒரு மூலையிலே போட்டு அமுக்கப்பட்டவைகளோ அல்ல என்பது நிச்சயம். தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்ட அனைத்தும் புதிய ஏற்பாட்டிலே அப்படியே அட்சரம் பிசகாமல் நிறைவேறியுமுள்ளது. அப்படியானால், கிறிஸ்துவின் வருகை ஒரு மூலையிலே நடந்ததாக எப்படியிருக்க முடியும்? நிச்சயமாக அது ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.

அன்பானவர்களே, இயேசு ஆண்டவரின் முதலாம் வருகை பற்றிய காரியங்களை பவுல் **இந்தளவு அறிந்திருந்தபடியால் தான்** மிகுந்த தைரியமாக, அகிரிப்பா ராஜாவே, **இது ஒன்றும் மூலையிலே நடந்த காரியமல்ல** என்று சொல்ல முடிந்தது. ஆனால், இதை வாசிக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அவருடைய முதலாம் வருகை பற்றிய காரியங்களில் இவ்வளவு ஆழமான அறிவு கொண்டவர்களாக உள்ளோமா? தயவு செய்து எண்ணிப்பார்ப்போம். இப்படி ஆழ்ந்த அறிவு வேத வசனங்களில் இருந்தபடியால் தான் ராஜாக்களுக்கு முன்பாகவும் பயமில்லாமல் சத்தியத்தைச் சத்தமாகச் சொல்ல முடிந்தது. சத்தியத்திற்காக வாழவும் முடிந்தது. நாமும், சத்தியத்திற்காக வாழவேண்டுமானால், அநேகருக்கு சத்திய வசனத்தைப் பயமில்லாமல் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால், வேத வசனங்களில் தேறினவர்களாக இருப்பது அவசியம் முயற்சிப்போமா?

## II கிறிஸ்துவின் ஊழியம் ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவருடைய ஊழிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறிய பிறகு, பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் (மத். 4:1) அங்கு அவர் வேத **வசனங்களைக் கொண்டு** பிசாசானவனை புறமுதுகு காட்டச் செய்ததற்குப் பிறகு, **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது.** என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். அப்பொழுது தம்மண்டை வந்த ஆயிரக்கணக் கானவர்களுக்கு ஆத்தும குணத்திற்கான பிரசங்கத்தோடு நிறுத்தாமல் சரீர சுகத்தையும் சேர்த்து வழங்கினார். (மத் 4:23) மருத்துவ விஞ்ஞானம் விண்ணை முட்டியிருக்கும் இந்த நாட்களிலே கூட, "அற்புத சுகம்" என்று பொய்யாக விளம்பரம் செய்தால் கூட கூட்டம் வாயைத் திறந்து கொண்டு அலைமோதுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படியானால், அந்த நாட்களில் அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களுக்கு எவ்வளவு பவிசும், மவுசும் இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! இதுபற்றி மத்தேயு ஆசிரியர், அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரிசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும்; திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள் (மத், 4:24,25) என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆக, **இவருடைய கீர்த்தி பெலஸ்தினா தேசமெங்கும் கொடிகட்டிப் பறந்திருக்கிறது.** இப்படித் திக்கெட்டும் போர் முரசு கொட்டிய ஊழியம் பற்றி, இது ஒரு மூலையிலே நடந்த ஒன்று என யாராவது சொல்ல முடியுமா?

இன்னும் அவர் தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் **மரித்தவர்களையும் உயிரோடே எழுப்பினார்.** ஆம், கண்ணீரும் கம்பலையுமாக தன் முன் வந்து நின்ற நாயீன் ஊர் விதவையின் மகனையும் (லூக். 7:14), தலைவன் ஒருவனுடைய மகளையும் (மத். 9:18,23), மரித்து நாலுநாளாகி நாற்றமெடுத்த நிலையிலிருந்த பெத்தானியா ஊரானாகிய லாசருவையும் உயிரோடே எழுப்பினார் (யோவா. 11:43). மரித்தவர்களை உயிரோடே எழுப்பின செய்தியை யாராவது மூடிபோட்டு வைக்க முடியுமா? காட்டுத் தீ போலல்லவா பரவியிருக்கும்.

இதற்கு மேலாக, அவருடைய ஊழியமும், வாழ்க்கையும் ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்பதற்கு, அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் ஒரு பலமான சான்று. ஆம், இயேசு சிலுவையில அறையப்பட்டு பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புக் கொடுக்கும் முன்பாக பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று (லூக். 23:44) **எருசலேமில் மாத்திரமல்ல பூமியெங்கும் அந்தகாரமாம்!** பகலிலே திடீரென இருளாகும் போது, ஏன் என்ற பயம் கலந்த கேள்வி எங்கும் எழுந்திருக்கும் தானே! அதற்கான பதிலை எல்லாரும் பெற்ற பின்தானே அமைதி

யடைந்திருப்பார்கள். அப்படியானால், இயேசுவின் மரணமும் யாருக்கும் தெரியாமல் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல. அதுபோல் தான் அவருடைய உயிர்த்தெழுதலும் எப்படியெனில் எம்மாவுக்கு நடந்து சென்ற சீடர்களில் ஒருவன், கூட வருவது இயேசு என்று தெரியாமல், "…. இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்" (லூக். 24:18). அந்தளவு அவருடைய உயிர்த்தெழுதல் பிரபலம்.

இப்படி பூமியெங்குமுள்ளவர்கள் அனைவரும் அறியும்படியாக நடந்த இயேசுவின் ஊழியம் பற்றி நீங்கள் எந்தளவு அறிந்து வைத்துள்ளீர்கள்? இயேசுவை தேவன் ஒரு நோக்கத்தோடு பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் என்பதும், அந்த இயேசு தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியானதொரு ஊழியத்தைச் செய்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா? இல்லையா? தெரியுமானால், அந்த ஊழியத்திற்கான பலனை உங்கள் வாழ்க்கையில் பெற்றுவிட்டீர்களா? **பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார்** என்று வசனம் சொல்லுகிறதே (1தீமோ 1:15) அப்படியானால், பாவ மன்னிப்புக்கென்று நீங்கள் இரட்சிப்படைந்து விட்டீர்களா? இல்லையென்பது உங்கள் பதிலாக இருக்குமானால், அதற்கான முயற்சியை, வேதவசனங்களின்படி இப்பொழுதே எடுத்து இரட்சிப்படையுங்கள்.

## III <u>கர்த்தருடைய சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல</u>

"இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவின் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்பது.

இன்றைக்கு அநேகரிடம் இயேசுவாலே வாக்களிக்கப்பட்டு (மத் 16:18) தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த (அப் 20:28) சபையைக் குறித்துப்பேசினால், ஏதோ இந்தச் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த ஒரு சம்பவம் போல, கிறிஸ்துவின் சபை பற்றித் தங்களுக்குத் தெரியாது என்றும், கர்த்தருடைய சபை பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே இல்லையென்றும் கூறுகின்றனர். அப்படிக் கூறுவது ஆன்மீகக் காரியங்களில் அவர்களுக்குள்ள அறியாமையை வெளிப்படுத்துகிறதென்பது கூட அவர்களுக்குப் பாவம் தெரியவில்லை!

மத உலகில், இன்றைக்கு எப்படித் தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக் கொள்ளும் அநேகருக்குக் கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபை விளங்காமலிருக்கிறதோ அதே போலத்தான், அன்றைக்கு அரியணையில் வீற்றிருந்த அகிரிப்பாவுக்கும் புரியாத ஒன்றாகவே இருந்துள்ளது. புரிந்து கொள்ளவேண்டிய ஒன்றைப் புரியாமலிருந்த அகிரிப்பவும், அவனோடிருந்தவர்களும் புரிந்து கொள்ளும்படியாகவே, இது ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்று அழுந்தக் கூறினார் பவுல்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, அகிரிப்பா இருக்கட்டும், இப்பொழுது உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், கிறிஸ்துவின் சபையை நீங்கள் அறிந்தும், புரிந்தும் வைத்துள்ளீர்களா? ஒருவேளை, நீங்கள் அறியாமலிருந்தால் அதுபற்றிக் கூறுகிறேன் கொஞ்சம் கவனியுங்கள். இச்சபை இயேசு பரமேறிய பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் ஆரம்பமாகியிருந்தாலும் (அப். 2ம் அதி), உண்மையில் இதுபற்றிய காரியங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே வெளிப்படத் துவங்கி விட்டது. கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபை குறித்து சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கன், **"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்"** என்று கூறியுள்ளார். (ஏசாயா. 2:2). தானியேல் தீர்க்கன், **"அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்"** என்று சொல்லியுள்ளார் (தானி 2:44). இவர்கள் சொன்னதுதான், அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் அப்படியே நிறைவேறியுள்ளது. கிறிஸ்துவின் சபை, ஏதோ நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த ஒரு காளானல்ல. அல்லது, இருக்கின்ற நூற்றுக்கணக்கான பிரிவினை சபை கூட்டங்களில் இதுவும் ஒன்றல்ல.

ஆக, தேவனால் திட்டமிடப்பட்டு (எபேசி 3:9-11) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா. 2:2), யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு (மத்தேயு 3:17) இயேசுவாலே வாக்களித்துக் கட்டப்பட்ட (மத்தேயு 16:16-18; அப். 2ம் அதி) சபையானது பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் 17 தேசத்தார் கூடியிருந்த போது மகத்தான முறையில் ஆரம்பமாகியுள்ளது. அன்று, ஆயிரக்கணக்கானவர் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தில் பேதுரு செய்த பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் இரட்சிக்கப்பட்டுள்ளனர் (அப். 2:41).

வேதவசனங்களின்படி உண்மை இதுவாக இருக்கும் போது, கிறிஸ்துவின் சபை பற்றி எனக்குத் தெரியாது என்று ஒருவன் எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்வதற்கு **கிறிஸ்துவின் சபையின் துவக்கம் என்ன ஒரு மூலையில் நடந்த காரியமா?** நிச்சயமாக அப்படி இல்லை. கிறிஸ்துவின் சபை வேத வசனங்களின் ஒட்டுமொத்த நிறைவேறுதல். இதிலே யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம். அப்படிச் சந்தேகப் படுவீர்களானால், பரலோகம் உங்களுக்கு சந்தேகமாகிவிடும். இது உண்மை!

அருமையானவர்களே, இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சபையில் நீங்கள் அங்கமாக இல்லையானால், அகிரிப்பாவும், பெஸ்துவும், பேலிக்ஸ்ம் எங்கே சென்றார்களோ அங்கே நீங்களும் செல்ல நேரிடும். வேண்டாம், வேண்டாவே வேண்டாம். இன்றே, கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில், விசுவாசித்து (எபி. 11:6), மனந்திரும்பி (2 கொரி. 7:10), அறிக்கையிட்டு, (அப். 8:37) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16), கர்த்தராலே சபையில் சேர்க்கப்படுங்கள். மறுமையை தேவாதி தேவனோடு கழியுங்கள். ஆமென்!

**EZSR**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள்!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்**

**எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்**

**இணைந்து நடத்தும்**

# எட்டாம் வேதாகம கருத்தரங்கம்

## EIGHTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 11,12-2005**

**செவ்வாய், புதன் (அரசு விடுமுறை நாட்கள்)**

நேரம் : **தினமும் காலை 9.00-12.30 மணி வரை**

**மாலை 2.00 - 5.00 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்,**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.**

**பேச்சாளர்கள் : தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

**வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.**

**தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.**

**<u>தொடர்பு முகவரி :</u>**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

போன் : 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# சாத்தான் இருப்பதாக நாம் ஏன் நம்புகிறோம்?

சிலர், சாத்தான் என்று ஒருவன் இருப்பதாக எப்படி ஒருவன் நம்ப முடியும், அதுவும் குறிப்பாக இந்த நவீன காலத்தில் அப்படி நம்புவது அரிது என்பார்கள். மனிதன் விண்வெளி வரை போய்வரும் இக்காலத்தில் சாத்தான் என்ற ஒருவன் காலம் கடந்தவன் என்று தான் நினைக்கிறார்கள். அப்படி, அவர்கள் எண்ணுவார்கள் என்றால் அவர்கள் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

ஆம், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். தேவனும், கிறிஸ்துவும் இருப்பது எப்படி உண்மையோ அப்படியே அவன் இருப்பதும் உண்மையே. அவன் உலகெங்கிலும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எங்கும் பிரசித்தமாயிருக்கிறது. அவனுடைய தாக்கம் எல்லாரிடத்திலும் இருக்கிறது. அதுமாத்திரமல்ல, வேதம், அவன் உலகத்திலிருப்பதாக போதிக்கிறது. அவன் ஒரு மனிதனல்ல, அவன் ஆவியாயிருக்கிறான். பொல்லாத ஆவியாயிருக்கிறான். தேவனும், கிறிஸ்துவும் எதை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களோ, அதற்கு மிகவும் எதிரானவன். மோசமான மற்றும் தவறான எந்த காரியத்திற்கும் பின்பாக அவன் இருக்கிறான். அவனைப் பிசாசு, பெல்லாங்கன், பொய்களுக்குப் பிதா, இப்பிரபஞ்சத்தின் தேவன் என்று வேதம் சொல்லுகிறது. இருள், பாவம், துக்கம் இவைகளை அவன் பிரதிநிதித்துவப்படுத்துகிறான். அவன் மரணத்தை உண்டாக்கி, நித்திய அழிவை கொண்டு வருகிறான். அவன் நமக்கு எதிரியாக இருப்பதால் அவனை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து, அவன் எப்படி செயல்படுகிறான் என்பதை புரிந்து வைத்திருந்தால், நாம் அவனை சந்திக்க ஆயத்தப்படுவதற்கு அது உதவியாக இருக்கும். நாம் அப்படி போதுமான அறிவில்லாதவர்களானால், ஆயுதம் தரிக்காதவர்களானால், அவன் நம்மை மோசம் போக்கி, மேற்கொண்டு, நம்மை அழித்து விடுவான்.

அவனைப் பற்றியும், அவன் கிரியை பற்றியும் பேசுகிற சில வசனங்களை தேவ வார்த்தையிலிருந்து நாம் இப்பொழுது படிப்போம். களைகளைப் பற்றிய உவமையை இயேசு விளக்கும் போது, இயேசு களைகள் பெல்லாங்கனுடைய புத்திரர் என்றும், **“அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு”** என்றும் கூறுவதை நாம் பார்க்க முடியும் (மத்தேயு 13:38,39) பேதுரு தன் நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், **“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் விழித்திருங்கள்; ஏனெனில் எதிராளியாகிய**

பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" (1பேதுரு 5:8). பவுல், சாத்தான் ஒரு சோதனைக்காரன் என்று சொல்லும் போது, "ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்" (1தெச. 3:5) என்கிறார். இயேசுவின் நாட்களிலிருந்த ஒரு மார்க்கக் கூட்டம் இயேசு, பிசாசுகளை பெயெல் செபூலினாலே துரத்துகிறார் என்றார்கள். நாம் வாசிக்கிறோம், "அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான், குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்க ளெல்லாரும் ஆச்சரியப்பட்டு, தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள், பரிசேயர் அதைக்கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் தூரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள்.

இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும், நிலை நிற்கமாட்டாது. சாத்தானை சாத்தான் தூரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிற வர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருகிறதே அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதி யாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்றார். (மத்தேயு 12:22-30) அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகையில் "பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களா யிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக் கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்". இன்னும் யோவான், "நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து சகோதரனைக்

கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே.

யோவான் பின்னுமாக எழுதுகையில், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், **பொல்லாங்கன்** அவனைத் தொடான், நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் **பொல்லாங்கனுக்குள்** கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்." (1யோவான் 5:18,19) வெளிப்படுத்தின விசேஷ நூலிலே யோவான் எழுதும்போது, "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற **பிசாசு** என்றும் **சாத்தான்** என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது? அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். (வெளி. 12:9) இன்னுமாக, "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையில் பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். **பிசாசென்றும், சாத்தானென்றும்** சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்" (வெளி. 20:1-3)

கிறிஸ்து தன் நாளில் வாழ்ந்தவர்களில் சிலரைக் குறித்து சொல்லும்போது, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்யமனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவான் 8:44,45) இயேசு தமது சீஷர்களை நோக்கி, "இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14:30). பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, "எங்கள் சுவிசேஷம் மறை பொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி,

அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2கொரி..4:3,4)

சாத்தான் எங்கிருந்து வந்தான்? என்று நீங்கள் கேட்கலாம். தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் (ஆதி 1:1) ஆகவே, அவனையும், அவனை பின்பற்ற தூதர்களையும் அவர்தான் உண்டாக்கியிருக்கிறார். அவன், தன்னை சிருஷ்டித்தவரை எதிர்த்து, தன்னைதானே உயர்த்தி, தேவ பகைஞனாக் கினான், 2பேதுரு 2:4 ல் நாம் வாசிக்கிறோம், "பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நகரத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்படவர்களாக ஒப்புக்கொடுத்து" என்று. அதன் பின்பு, தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களும் அதனுடைய பின்விளைவை சந்திக்க வேண்டும் என்று சில உதாரணங்களை தருகிறார். யூதா நிருபத்தில் நாம் வாசிக்கிறோம், "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார். (யூதா. 6) நியாயத் தீர்ப்பு நாளிலே கிறிஸ்து துன்மார்க்கர்களைப்பார்த்து, ".... சபிக்கப் பட்டவர்களே, என்னைவிட்டு, **பிசாசுகாகவும், அவன் தூதர்களுக்காகவும்,** ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் (மத்தேயு 25:41)

நாம் ஆரம்பத்திற்கு செல்லுகையில், ஆதாமையும், ஏவாளையும் தேவன் சிருஷ்டித்து, அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது, அவன், ஆதாமிடம் நீ எல்லா விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம், ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று கூறினார். அந்த விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள் என்பதையும் அவர்களுக்கு தேவன் தெளிவாகச் சொன்னார். இப்பொழுது நாம் வாசிப்போம், "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது அது ஸ்திரீயை நோக்கி; நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதை புசிக்கவும் அதை தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அப்பொழுத சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்பட்டத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப் பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள்.

பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன், நான் தேவரீருனடய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர் நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன என்றார் ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றார்" (ஆதி. 3:1-13) அந்த நாளிலே மனுஷனும், மனுஷியும் ஆவிக்குரிய ரீதியில் மரித்துப்போனார்கள், ஆனாலும் ஆணையும், மற்ற சிருஷ்டிகளையும் தேவன் சபித்தார். பெண்ணுக்கு தண்டனை கொடுத்தார். மத்தேயு 4ம் அதிகாரத்தில் சோதனைக்காரனாகிய சாத்தான் கிறிஸ்துவினுடம் வந்து, அவரை மூன்று வகையில் சோதிக்கிறான் ஆனால் ஒவ்வொரு முறையும், அவர் "எழுதியிருக்கிறதே" என்று தேவ வார்த்தையை பேசி அவனை மேற் கொண்டார். அவன் தோல்வியடைந்தவனாக இறுதியில் சென்றுவிட்டான்.

சாத்தான் மீது இயேசு கொண்ட மிகப்பெரிய வெற்றி, அவர் கல்லறையிலிருந்து உயிரோடெழுந்தது தான். அவர் தன்னை தேவ குமாரன் என்று நிரூபிக்க மாத்திரம் அப்படிச் செய்யாமல், மனுக்குலத்தை இரட்சிக்கவும், ஒரு நாளில் எல்லாம் அவருக்குள் எழுப்பப்படுவார்கள்

என்பதை நிச்சயிக்கவுமே அப்படிச செய்தார். கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும், இந்த வாக்குத்தத்தம் உண்டு, அதாவது அவர், இவர்களை இரட்சித்து, எல்லா சோதனையிலிருந்தும் விடுவித்து, இறுதியில் பரலோகத்தில் சேர்ப்பார் என்பதே அது.

என் நண்பர்களே, பழைய பிசாசாகிய சாத்தான் உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இவ்வுலகத்து பொருளைக் காண்பித்து, உங்களை அவன் கொள்ளை கொள்ள அனுமதிக்க வேண்டாம். இவ்வுலகத்தில் உண்டான, கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகளைக் கொண்டு உங்களை தாக்கி அழிக்க இடம் கொடுக்க வேண்டாம். கள்ள போதனை, கள்ள மார்க்கம் இவைகளினாலே உங்களை அவன் மோசம் போக்கி வழிவிலகும்படி செய்ய அனுமதிக்க வேண்டாம். அவனைப் பின்பற்றினால் நிச்சயம் மரணமுண்டு, அவனை பின்பற்ற வேண்டாமென்று இயேசு கற்பிக்கிறார். தேவ வார்த்தையான வேதாகமம், சத்தியத்தின் அழகு பற்றியும், நித்தி ஜீவனின் வழிபற்றியும் கூறுகிறது. அதேபோல், அது சாத்தனைப் பற்றியும், அவன் எப்படி மகா தந்திரவாதி என்பது பற்றியும் நம்மை எச்சரிக்கிறது.

ஆகவே, சாத்தானை பற்றிய எச்சரிப்பை அடையுங்கள். அவனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானியுங்கள். கர்த்தரை பற்றியும், அவர் வழிகளைப் பற்றியும் படியுங்கள் அதே சமயம் நமது எதிராளியான பிசாசுபற்றியும் அறிந்து கொள்ளுங்கள். தேவன் மேலும், ஜீவனுள்ள தேவனுடைய குமரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் விசுவாசம் வையுங்கள். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6) நாம் பாவத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் மனந்திரும்ப வேண்டுமென்று அவர் கட்டளை யிட்டிருக்கிறார். (அப். 17:30) கிறிஸ்து சொல்லுகிறார் நாம் மனந்திரும்பாமல் போனால் அப்படியே கேட்டுப்போவோம் என்று. கிறிஸ்துவை, தேவ சுதன் என்று அறிக்கையிட வேண்டும் (மத். 10:32) இறுதியாக, நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் (மாற். 16:16) நாம் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றால் பாவமன்னிப்பு உண்டு என்று பேதுரு சொல்லுகிறார் (அப். 2:38) நாம் இப்படி செய்தால், தேவன் தமது சபையில் நம்மை சேர்ப்பார். இப்படி செய்யும்போது, நாம் சாத்தானை உடையவர்கள் அல்ல, நாம் கிறிஸ்துவை உடையவர்களாய் மாறுகிறோம் (1 பேதுரு 4:16) நாம் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தால் பரலோக பாக்கியம் பெறுவோம் (வெளி 2:10; 22:14)

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# சமாரியா ஸ்திரீ

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இம்மாதம் பரிசுத்த யோவான் எழுதின நற்செய்தி நூல் 4ம் அதிகாரம் 4 முதல் 42 முடிய அடங்கியுள்ள வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ள பெண்மணி, நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் நிகழ்த்திய உரையாடல் மூலம் நாம் என்ன பாடம் கற்றுக் கொண்டு பிரயோஜனமடைய முடியும் என்று பார்ப்போம்.

இயேசு தாம் இருந்த இடத்திலிருந்து கலிலேயாவுக்குப் போவதற்காக பயணிக்கிறார். அப்போது சமாரியா வழியாக செல்ல நேருகிறது. சமாரியா வழியாகச் செல்வது பக்கமான வழி என்ற காரணம் மட்டுமல்லாமல், அவ்விடத்திற்கு செல்வது இயேசுவுக்கு அவசியமாயும்பட்டது. எதிர்காலத்தில் இந்த சமாரியாவில் சுவிசேஷம் அறிவிக்கப்படப்போவதற்கு அடித்தளமாக இயேசு கிறிஸ்து இப்போதே தான் எதையாவது சமாரியாவிலே செய்ய வேண்டுமென்று எண்ணி செயல்படுகிறார். நாம் அனைவரும் அறிந்தவண்ணம் தேவன் யூதர்களை தமக்கு சொந்தமான ஜனமாக தெரிந்து கொண்டார் சமாரியர் தேவனை மறந்து வேறு தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். ஆனால் தேவன் இன்னும் அவர்களை நேசித்து வந்தார். யூதருக்கு கைகொடுத்த தேவன் அவர்களையும் தம் கரத்தில் வைத்தே இருந்தார். அனைத்து தேசங்களையும் தம் ஒரே சரீரத்திற்குள் கொண்டு வர வேண்டுமென்பது அவருடைய திட்டத்திற்குள் ஒளிந்திருந்த ஒன்றுதான். அத்திட்டத்தின் கீழ் சமாரியாவும் அங்கம். எனவே தம் சீஷரோடு கூட சமாரியாவுக்குள் செல்கிறார்.

மிகவும் களைப்படைந்தவராய், தாகத்தோடும், பசியோடும் இருந்த இயேசு புகழ்பெற்ற கிணற்றினருகே அமருகிறார். சீஷர்கள் போஜனங் கொள்ளும்படி ஊருக்குள்ளே போய் விடுகிறார்கள்.

வேதாகமத்தில் பலஇடங்களில் பெண்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் தேவனாலே கிணற்றிணருகே நிகழ்ந்திருக்கிறது. உதாரணமாக, இயேசுவின் ஜனனத்தின் வரிசையில் இடம் பெற்றிருக்கும் ரெபேக்காள், ராகேல் போன்றவர்களை நாம் முதல் முதலில் கிணற்றினருகே தான் சந்தித்திருக்கிறோம். இயேசுவுக்கு நன்றாக தெரிந்திருந்தது, இன்னுமொரு ஸ்திரீயின் வாழ்க்கையில் ஒரு மாற்றம் தேவ சித்தத்தின்

படியான இந்த சந்திப்பின் மூலம் சமாரியாவில் நிகழப்போகிறது என்று. ஆனால் இவளோ அவர்களைப் போல் அல்லாது ஒரு சமாரியப் பெண் இருக்கிறாள். அதாவது புறஜாதிப் பெண்.

இந்த சமாரியப் பெண்ணும் தண்ணீர் மொண்டு கொள்ள வந்தாள். அப்போதுதான் நமதாண்டவராகிய இயேசு ஒரு எளிமையான வேண்டுகோளை விடுக்கிறார் (வ.8) "தாகத்துக்குத் தா என்று", அதற்கு அவள் நீர் யூதனாயிருக்க சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில் எப்படி தண்ணீர் கேட்கலாம் என்கிறாள். அவளைப் பொறுத்தவரை இயேசுவை ஒரு வழிப்போக்கனாக எண்ணினாள். நம் இரட்சகரும் மற்ற மனிதர்களைப் போலவே நடத்தப்பட தன்னை அனுமதித்தார் என்பது நமக்கு மகிழ்ச்சியையும், அதே சமயம் ஆச்சரியத்தையும் ஊட்டுகிறது. சகல கனமும் மாட்சிமையும் பொருந்திய இயேசு தன்னை ஒரு சாதாரண மனிதனாக நினைக்கும்படியாக நடந்து கொள்கிறார். ஆனால் **10ம் வசனத்தில்** தன் தெய்வீகத் தன்மையை அவளுக்கு வெளிப்படுத்துகிறார். ஜீவத்தண்ணீரைப் பற்றி பேசுகிறார். ஆவிக்குரிய உரையாடல் இங்கு ஆரம்பமாகிறது. அவள் எங்கே இருக்கிறாள், அவள் இனி எங்கே இருக்க வேண்டுமென்று அவளுக்கு உணர்த்துகிறார்.

12ம் வசனத்தில் யாக்கோபுவைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? என்று இயேசுவிடம் கேட்கிறாள். பிரியமானவர்களே கடல்களும், சமுத்திரங்களும் அவருக்கு சொந்தமாயிருக்கும் போது, நாம் எத்தனை முறை ஒரு கலசம் தண்ணீர் அவருக்காக கொடுத்து அவரை மகிழ்விக்காமல் நாம் சிறுபிள்ளைத் தனமாக கணக்குப் பார்த்திருக்கிறோம்? சிந்திப்போம். இந்த ஸ்திரீயின் கேள்விக்கு பதிலாக **நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்** (வச.14) என்றார். உடனே அவள் மகிழ்ச்சியுடன் **ஆண்டவரே எனக்கு தாகமுண்டாகாமலும் நான் இங்கே மொண்டு கொள்ள வராமலுமிருக்கும்படி அந்த தண்ணீரை எனக்குத் தரவேண்டும்** என்கிறாள். நம்மில் அநேகரும் இதைப்போலவே கிறிஸ்துவுடனே வாழும் வாழ்க்கையில் வேண்டியது இருக்கும் இடத்தில் கிடைக்க வேண்டுமென்றும், சுலபமாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்றும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்தேயிருக்கிறோம். இந்த இடத்தில்தான் இயேசு முக்கியமான கட்டத்திற்குள் சென்று **நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துவா என்கிறார்.** எனக்கு புருஷன் இல்லை என்று சொன்ன அவளிடம் உனக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள்.

இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார். இயேசு இப்பொழுது ஒரு தேவைக்காக காரியங்களை செய்து கொண்டு வருகிறார். அவளுடைய மனசாட்சிக்கு வேலை கொடுக்கிறார். அவளுடைய கடந்த கால பாவ வாழ்க்கையை அவர் அறிந்திருந்த போதிலும் தேவனிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய ஈவை அவள் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். கடந்த கால காரியங்களை விட இனி அவள் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டுமென்பதில் இயேசு கவனமாயிருந்தார். எல்லாவற்றையும் இயேசு அறிந்திருக்கிறார், அறிந்து கொண்டிருக்கிறார், அறியப்போகிறார் என்பதை அறிந்த இந்த சமாரிய ஸ்திரீ மறுபேச்சு பேசாமல், தன் தவற்றை நியாயப்படுத்தாமல், என் தவறான வாழ்க்கையைப் பற்றி பேச இவர் யார்? இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? என்றெல்லாம் வீம்பு பேசாமல், இனியும் இந்த இடத்தில் இருந்தால் மீண்டும் கேள்வி கேட்பார் எனவே இடத்தை காலி செய்து விடுகிறேன் என்றும் எண்ணாமல் **ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்** என்று அப்படியே தன்னை தாழ்த்தி அவரிடம் சரணடைந்து விடுகிறாள். பிறகு உடனே, அவள் தொழுகை பற்றி கேள்வி கேட்கிறாள். நாங்கள் மலைகளிலே தொழுது கொண்டிருக்கிறோம். நீங்கள் எருசலேமில் தொழுது கொள்ள வேண்டுமென்கிறீர்கள். எங்கு செல்வது? எது சரி? என்று கேட்ட கேள்விக்குத்தான் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து **தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்** (24) என்ற மாபெரும் உண்மையை இன்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனைக்கு அஸ்திபாரமாக இருக்கும் இந்த வசனத்தை முதன் முதல் இந்த **சமாரியப் பெண்ணிடம்** இயேசு கூறினார்.

இதைக் கேட்ட அவள் இந்த புதிய உபதேசம் உண்மைதானா? சட்டத்தை மாற்றிப் பேசுவதற்கு இவர் யாரிடமிருந்து அதிகாரம் பெற்றார்? தேவனுக்கு முக்கியமாக தோன்றாத இடத்திற்கா இந்த யூதர்கள் தொழுவதற்காக போவார்கள்? இப்படி பல கேள்விகளை தனக்குள்ளே கேட்காமல், உண்மையை அறிந்து கொள்ள முயற்சிக்கிறாள் இந்த சமாரியப் பெண். ஏற்கனவே இயேசுவை தீர்க்கதரிசி என்று அறிக்கையிட்ட இவள், **கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன். அவர் வரும் போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்** என்றாள். புறஜாதிப் பெண்ணாக இருந்தாலும், இவள் முற்பிதாவாகிய யாக்கோபு பற்றி பேசுகிறாள், தீர்க்கதரிசி என்கிறாள், தொழுகையைப் பற்றி கேள்வி கேட்கிறாள், இப்போது மேசியா பற்றியும் பேசுகிறாள். அதற்கு

இயேசு உன்னுடனே **பேசுகிற நானே அவர்** என்றார். இது அவளுக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் தெரியுமா? யூதர்கள் அநேக சமயங்களில் இயேசு செய்யும் அற்புதங்களைப் பார்த்து விட்டு இவர் மேசியாவாக இருப்பாரோ? என்று ஆச்சரியப்படும்போதெல்லாம் அவர் **நான் மேசியா என்று அவர்களுக்கு வெளிப்படுத்தினதில்லை.** இன்னும் அவர் அநேகரை சுகப்படுத்திய போதெல்லாம் கூட அப்போஸ்தலர்களிடம் தன்னையும், தன் வல்லமையையும் பிறருக்கு கூற வேண்டாமென்றுதான் எச்சரித்திருக்கிறார். ஆனால் இங்கோ, குறைந்த நேர உரையாடலில், அதுவும் தரமற்ற வாழ்க்கையை கொண்டிருந்த புறஜாதிப் பெண்ணான இவளிடம் தன்னை யார் என்பதை உடனே வெளிப்படுத்திவிட்டார். அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஒருவேளை இனி தன் ஊழிய நாட்களில் சமாரியாவுக்கு வரமுடியாமல் போய்விடுமோ என்று நினைத்திருக்கலாம். தன் இரண்டு நாள் தங்குதலில் தன்னை யார் என்று அறிவிக்காவிட்டால் நாளைக்கு சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு, இந்த சமாரியர்களை தங்களோடு சேர்த்துக் கொள்ளமாட்டார்களோ என்று நினைத்திருக்கலாம், எப்படி அவர் நினைத்திருந்தாலும், நாம் அதை கேள்வி கேட்க நியாயமுமில்லை நமக்கு தகுதியுமில்லை, தான் எதற்காக பூமிக்கு வந்தார் என்பதை அவர் நன்றாக அறிந்திருந்தார்.

**"மேசியாவைக் கண்டேன்"** என்ற மகிழ்ச்சியில் உடனே அவள் தன் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய் ஜனங்களை நோக்கி, **வந்து பாருங்கள்** என்று அறைகூவல் விடுக்கிறாள். சர்வ சிருஷ்டிக்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்ற பிரதான கட்டளையின்படியாக இவளும் தன் பங்கை அன்றைக்கு செய்தே இருக்கிறாள். அவள் போய் சொன்னதின் விளைவாக அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் (வச. 39) என்று வாசிக்கிறோம்.

அன்பானவர்களே, அவள் வாழ்க்கை எவ்வாறு மாற்றப்பட்டது என்பதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள தேவன் இச்சம்பவத்தை இடம் பெறச் செய்யவில்லை. மாறாக, அன்றைய நாட்களில் சம்பந்தங்கலக்க தகுதியில்லாத இந்த சமாரியப் பெண்ணை இயேசு சந்தித்து அவளை செயல்பட வைத்த விதத்தை நாம் கவனித்து ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. எத்தனையோ பெண்கள் அந்தக் கிணற்றுக்கு வந்து தண்ணீர் கொண்டு சென்றிருப்பார்கள். ஆனால் இயேசு இவளிடம் சில விசேஷ குணம் இருப்பதை உணர்ந்திருந்தார். முதலாவது அவள் இவரை

நம்புவாள் என்று இயேசு அறிந்திருந்தார். இரண்டாவதாக வரப்போகும் மேசியாவைப் பற்றி இவள் தெரிந்து வைத்திருந்தாள். கொள்கை விஷயத்தில் யூதருக்கும், சமாரியருக்கும் இடையே இருந்த வேறுபாட்டை உணர்ந்து வைத்திருந்தாள். அது மட்டுமல்ல தான் விசுவாசத்தை மற்றவரிடம் பகிர்ந்து கொள்வாள் என்பதை இயேசு அறிந்திருந்தார். சமாரியர்களின் ஆத்தும அறுவடையில் இவளுக்கும் பங்கு இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஜீவ தண்ணீராகிய அவரை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்வோமானால் தகுதியற்ற ஒருவர் கூட தகுதியை பெற முடியும் என்பதை இந்தப் பெண்ணின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

எனவே இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே! புறஜாதிப் பெண்ணே இயேசுவின் அன்பை ஊருக்குள்ளே ஓடிச்சென்று கூறினாள் என்றால் அவருடைய சொந்த ஜனங்களாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்ற நாம் எவ்வளவு அதிகமாக அவருடைய வேலையைச் செய்ய வேண்டும்.?

**- ரேச்சல் ராஜநாயகம்**

## ஸ்தேவானின் மரணம்!!

1. *பயமுறுத்தும் கூட்டம் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்*
2. *கர்த்தரின் மேல் எத்தனை அன்பு, எவ்வளவு விசுவாசம்*
3. *அவனுக்கு நியமிக்கப்பட்டதில் எத்தனை பொறுப்பும், அர்ப்பணிப்பும்*
4. *எந்த நிலையிலும் உண்மையை பேசக்கூடிய தைரியம்.*
5. *தன் பிரசங்கத்தை கேட்டவர்களுக்கு உண்மையை தெரிவிக்க வேண்டும் என்பதின் நோக்கத்தின் மூலம் அவர்கள் மீதும் வைத்த அன்பு.*
6. *கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், சமாதானம்.*
7. *பவுலைப்போல, ஸ்தேவானும் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவன் தேகத்தில் இருப்பதைவிட மரித்து கிறிஸ்துவோடிருப்பது நலமென கருதினான் (பிலி. 1:21-23).*
8. *உண்மையாக, ஸ்தேவானின் வைராக்கியமுள்ள சரீரத்திலும், வாழ்க்கையிலும், மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார் (பிலி. 1:20).*

*நம் ஒவ்வொருவரைக் குறித்தும் இவைகள் சொல்லப்படுவதாக!!!*
*அதற்கு ஏதுவாய் நடப்போமாக!*

வாலிபர் பகுதி

# உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக

இந்த மானுட உலகில் பிறந்த எவரும் தங்கள் வாழ்வில் இருதயம் கலங்காமலிருக்க முடியாது, சிறுபிள்ளையாக இருக்கும் போது வேண்டுமானால் விவரமறியாததினால், விஷயத்தின் விளைவுகள் புரியாததினால் மனம் கலங்காமலும், இதயம் பதறாமலும் இருந்திருக்கலாம், ஆனால் அரசு தேர்வெழுதும் ஒரு மாணவன், முடிவுகள் வர காத்திருக்கும் போது, நல்ல மதிப்பெண் பெறவேண்டுமே என்று இருதயம் அடித்துக் கொள்ளுமே அதை என்னவென்று சொல்லுவது, திருமணமாகி, இல்லற வாழ்க்கையை இனிமையாய் பல கனவுகளுடன் துவங்கிய ஒருவர் தன் துணையை இழந்தால் அவர்கள் இதயம் கலங்குமே ஐயகோ! அதை எப்படி விவரிப்பது! இப்படி மனிதன் தன் நம்பிக்கை தகர்க்கப்படும் சூழ்நிலை உருவானால் இருதயம் கலங்குவது இயல்புதான் என்பதை என்னோடு நீங்களும் ஆமோதிப்பீர்களென நம்புகிறேன்.

பாவிகளை மீட்க தாவியே இவ்வுலகிலுதித்த மாசில்லாத மாணிக்கமாம் மன்னவர் இயேசு தனது முப்பதாவது வயதில் தனது ஊழியத்தை ஆரம்பித்து, தன்னை பின்பற்றும்படி பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்தார். அவர்கள் எல்லாவற்றையும் விட்டு இயேசுவை பின்பற்றினார்கள். அற்புதங்களைக் கண்டு அதிசயித்தார்கள், இறையரசைப் பற்றி இறைமகன் பேசக் கேட்டார்கள், ஆண்டவரோடு இவர்களும் பலருக்கு இவ்வரசைப் பற்றி அறிவித்தார்கள். ஆண்டவரோடு அவர்கள் தங்கள் வாழ்வின் சுமார் மூன்றரை ஆண்டுகளைக் கழித்தார்கள். அந்த சமயத்தில் தான் தாங்கள் நம்பி வந்த ஆண்டவர் இவ்வுலகை விட்டு பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்கிறார். இயேசு பிரானை நம்பி வந்த அவர்கள் ஐய்யோ எல்லாவற்றையும் விட்டு வந்தோமே, இப்பொழுது இவர் நம்மை விட்டுப் போகிறேன் என்கிறாரே என்று மிகவும் கலக்கமடைந்தார்கள். அந்த சூழ்நிலையில்தான் **"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக"** (யோவா 14:1) என்கிறார்.

## *கலங்காமலிருக்க காரணங்கள்!*

ஆதியிலிருந்தவர், அவர் பெயர் வார்த்தை, தேவனுடனே அவர் தாம் இருந்தார். அவர் தேவனாக இருந்தார், அனைத்தும் அவரிடமிருந்தே தோன்றின, தேவனாம் அவரை விசுவாசித்தோர் எல்லோருக்கும் கடவுளின் மக்களாய்க் கனியும் வாழ்வை தரவே வார்த்தை மனுவுருவாய் தோன்றினார். தோன்றிய அவர் தன் பூமியின் வாழ்வினிறுதியில் தன் சீஷரை அழைத்து,

அவர்களை தன் வாழ்வில் நடக்கவிருக்கும் பயங்கர சம்பவங்களை தாங்கிக் கொள்ள ஆயத்தப்படுத்தும்படி பேசும் போது தான், தான் அடையப்போகும் மரணத்தையும், அதை சூழ்ந்து நடக்கும் சம்பவங்களாலும் கலக்கமடைந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்து, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று தேற்றுகிறார், அவர்கள் உள்ளத்தை ஆற்றுகிறார்.

வார்த்தையாயிருந்த அவர் வெறுமனே ஆறுதல் வார்த்தைகளை சொல்லிவிட்டுச் செல்லவில்லை அதற்கான காரணங்களையும் அப்போஸ்தலர்களுக்கும், நமக்கும் தருகிறார். முதலில் சொல்லுவது, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு.... நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு.... மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவா. 14:2,3) என்கிறார். நமதாண்டவர் தன் அப்போஸ்தலர்களை விட்டு சென்றதே அவர்களுக்கும் நமக்கும் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணவே, தேவனுடைய வலது பாரிசத்துக்கு ஏறிச் சென்றிருக்கிறார். பாவிகளாயிருக்கிற நம்மை பரிசுத்தவான்களாக்கி, பரிசுத்த தேவனோடும், ஆயிரமாயிரமான தூதர்களோடும் வார்த்தையின் வர்ணனைக்கு அடங்காத பரலோகத்தில் நம்மை கொண்டு சேர்க்கவே, அங்கு இப்பொழுது ஸ்தலத்தை ஆயத்தம் செய்கிறார்.

பரலோகத்தை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரம் 9ம் வசனம் தொடங்கி 27ம் வசனம் முடிய வாசித்துப்பாருங்கள். அந்த ஆனந்த பாக்கியத்தை நாம் அடையவே நமது ஆண்டவர் அங்கு சென்றிருக்கிறார். அதுவும் தாம் மாற்கு 12:25ம் வசனத்தை நாம் வாசித்தோமானால், நாம் அவ்வுலகத்தில் தேவ தூதரைப்போலிருப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்மை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக உண்டாக்கிய தேவன், அவர்களை விட நம்மை நேசித்து, தம் நேச குமாரனையே நமக்காக கொடுத்து உன்னதத்திற்கு ஏறிப்போன அவருக்குள், நம்மையும் உன்னதங்களிலே உட்காரும்படி செய்தார்.

இரண்டாவதாக, அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்றிருக்கிற படியால், அவர் பூமியிலிருந்த போது செய்த கிரியையைப் பார்க்கிலும் நாம் அதிகமாய் செய்வோம் என்கிறார் (யோவா 14:12) இவ்வசனம் பிரிவினை கூட்டத்தாரால் தவறாக பயன்படுத்தப்படுகிறது. நாம் இயேசுவை விட பெரிய அற்புதங்களை செய்வோம் என்று கூறிக்கொண்டு, அந்த விந்தை நாதர் செய்த அற்புதங்களுக்கு அருகில் நிற்கவும் தகுதியில்லாத வித்தைகளை செய்து ஊரை ஏமாற்றுகிறார்கள். ஆனால் ஆண்டவர், அதை பற்றி இவ்வசனத்தில் சொல்லாமல், நாம் ஒரு வகையில், அவர் செய்ததை விட பெரிய காரியம் செய்யப்போகிறோம் என்றே விளம்புகிறார். இங்கே

தயவு செய்து இயேசுவைவிட நாம் பெரியவர்கள் என்று சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். அப்படியானால், நாம் என்ன அப்படி செய்யப்போகிறோம்? தொடர்ந்து படியுங்கள்!

ஒரு விசை நமது ஆண்டவர் யோவான் ஸ்நானகனைப் பற்றி செப்புகையில், ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் அவனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆனால் விண்ணரசில் சிறியவனாகயிருப்பவன் அவனிலும் பெரியவன் என்கிறார் (மத். 11:11) ஏன் அப்படிச் சொல்லுகிறார், ஏனென்றால், அவன் பரலோக சர்க்கார் வரும் என்று அறிவித்தானே தவிரே அதிலே அங்கமாயிருக்கவில்லை. அதற்குள் அவனின் இப்புவியின் வாழ்வு உதிர்ந்தது. அதுபோல, நமது இயேசு ஆண்டவரும் விண்ணரசைப் பற்றி அறிவித்தார், அது ஸ்தாபிக்கப்பட எல்லாவற்றையும் செய்தார், தன்னையே தியாகமாக்கினார் என்பது உண்மையானாலும், அந்த விண்ணரசு இம்மண்ணுலகில் வந்தது என்று பிரசங்கித்து, பலரை இரட்சித்து அதில் சேர்க்கின்ற வேலையை அப்போஸ்தலர்களும், நாமும் தான் செய்கிறோம். இந்த வகையில் தான் நாம் இயேசு இப்புவியிலிருந்த போது செய்த கிரியைகளைக் காட்டிலும் பெரிய கிரியையை செய்கிறோம். நீங்களும் இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்!.

மூன்றாவதாக, அவர் பரமேறிச் சென்று, நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேச துவங்கிய நாள் முதல், நாம் அவருடைய நாமத்தில் பிதாவினிடத்தில் பேசும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் (யோவா. 14:13,14). அவருடைய நாமம் வானத்திலும் பூமியிலும் அதிகாரம் பெற்று, எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த நாமம் (மத் 28:28-20; பிலி. 2:8,9) அப்படிப்பட்ட நாமத்தில் நாம் எதைக் கேட்டாலும் அவர் செய்வேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய நாமத்தில் எதைக்கேட்டாலும் அது நடக்க வேண்டுமென்றால், அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைநிற்க வேண்டுமென்ற நிபந்தனையை அவர் கொடுத்திருக்கிறார் (யோவா. 15:7) அது மாத்திரமல்ல, நாம் கனிதரும் செடிகளாக, ஆவிக்குரிய கனிகளைத் தரும் தருக்களாக தற்பரனுக்காகயிருப்போமென்றால் அவர் நமது ஜெபத்தை நிச்சயம் கேட்பார் (யோ 15:16) ஆகவே, அவர் நமது ஜெபத்திற்கு பதில் அளிப்பேன் என்று சொல்லி, தேவனிடத்தில் நமக்காக பரிந்து பேசுவதாலே, நம்முடைய இருதயம் எதற்கும் கலங்கத் தேவையில்லை.

நான்காவதாக, தேற்றரவாளனாகிய அவர் போனபின், சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றவாளனை நமக்கு தருவேன் என்கிறார் (யோவான் 14:16,17) அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரை ஞானஸ்நான அளவில் பெற்றுக்கொண்டார்கள் என்று அப்போஸ்தலர்

நடபடிகள் நூலில் நாம் காணமுடியும். (அப். 2:1-5) ஆனால், ஒரு கிறிஸ்தவனுக்கு, அவர் வாசம் செய்யும் அளவுக்கு தான் கொடுக்கப்படுகிறார் (ரோமர் 8:11; அப். 5:32) அவர் தமது பட்டயமாகிய, வேத வசனத்தைக் கொண்டு நம்மையின்று வழிநடத்துகிறார். ஆகவே இன்று இயேசுவானவர் நம்மிடத்தில் சரீரப்பிரகாரமாக இல்லை என்றாலும், அவர் அனுப்பிய சத்திய ஆவி நமக்குள்ளே வாசம் செய்கிறார் என்பதாலே நாம் கலங்கத் தேவையில்லை இவரும் நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளினாலே விண்ணப்பம் செய்கிறார். நமது பலவீனங்களிலே உதவுகிறார் (ரோமர் 8:26) ஆகவே, நமது இதயம் பதறத் தேவையில்லை.

ஐந்தாவதாக, அவர் பரமேறிச் செல்லும்போது, தமது சமாதானத்தையே நமக்கு வைத்துப்போவதாக விளம்பிச் சென்றிருக்கிறார். இவ்வுலகம் நமக்குத் தரும் தற்காலிக சமாதானத்தைப் போலல்ல, அவர் எப்படி என்ன துன்பம் வந்தாலும், தனக்கு மனிதன் மரணத்தை வெகுமதியாக கொடுத்தபோதிலும், வேதனையான வேளையிலும் தன் பிதாவோடு சீரான உறவு தனக்கு இருந்ததினால், தனக்குள்ளாக சமாதானமாக இருந்தாரே, அதே சமாதானத்தைத் தருகிறார். அதாவது, இயேசு, துன்பமே வராது என்று நமக்கு வாக்களிக்கவில்லை, வேதம் அதற்கு மாறாகத்தான் கூறுகிறது (2தீமோத். 3:12) அதுமாத்திரமல்ல, முற்காலத்திலே நாம் பாவத்தினால் தேவனை விட்டுப் பிரிந்திருந்தோம், ஆனால் இப்போது இயேசுவுக்குள் நாம் தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1) அவர், இப்படிப்பட்ட சமாதானத்தையே நமக்கு கொடுத்திருப்பதினாலே நாம் கலங்கத்தேவையில்லை.

எனக்கன்பான வாலிபர்களே, இவ்வுலகைவிட்டு, தன் அப்போஸ்தலர்களை விட்டு, பரமேறி சென்றிருக்கிற இயேசு, நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்யப்போயிருக்கிறார், செய்து முடித்து அவர்களையும், நம்மையும் அங்கு அழைத்துச் செல்லுவார். அவர் போனபின் நாம் அவரை விட பெரிய காரியமான, அவரின் சுவிசேஷம் அறிவித்து, பலரை சீஷராகி, சபையாகிய இராஜ்ஜியத்திற்குள்ளாகும் பணியைச் செய்யப்போகிறோம். அவர் போனபின்பு மகத்துவமான அவர் நாமத்தில் கேட்கும் பாக்கியம் நமக்குண்டு, நமது பெலவீனங்களிலே நமக்கு உதவி செய்யும் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார். தேவ சமாதானத்தையே இயேசு நமக்காக கொடுத்துச் சென்றிருக்கிறார் என்கிற இந்த காரணங்கள் நமக்கிருப்பதால், நமது இருதயம் கலங்கத்தேவையில்லை. நம்மை அவர் திக்கற்றவர்களாக விடார், மீண்டும் வருவார், நாம், அவர் கற்பனையின்படி நடந்தால், நம்மையும் பரலோகம் அழைத்துச்செல்லுவார்! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

---

*வாலிபர்களாகிய உங்களை கருத்தரங்கில் சந்திக்க ஆவலாயிருக்கிறோம்.*

# ஆகாயத்து அதிபதி - கழுகு

சிறுவர் பகுதி

எனக்கு பிரியமான சிறுதம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்களோடு கூட சேர்ந்து வேதத்தின் காரியங்களை தியானிப்பது மகிழ்ச்சியாயிருக்கிறது. இந்த மாதம் நாம் எதைப் பற்றி பார்க்கப்போகிறோம் தெரியுமா? "கழுகு"-ஐ பற்றித்தான்.

உலகம் முழுவதிலும் 50க்கும் மேற்பட்ட வகைகளான கழுகுகள் உள்ளதாம். கழுகின் அற்புதமான தன்மைகளும், குணாதிசயங்களும் எந்த ஒரு மனிதனாலும் உண்டாக்கப்பட்டிருக்கலாகாது என்று வேதம் நமக்கு போதிக்கிறது. இந்த அற்புதமான பறவையை தேவன் மட்டுமே உண்டாக்கியிருக்க முடியும். சரி நாம் இப்பொழுது அதின் தன்மைகளையும், குணாதிசயங்களையும் பார்க்கலாமா?

யோபு என்ற உத்தமன் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவரிடம் தேவன் என்ன சொல்கிறார் பாருங்கள். யோபு 39:27ல் தேவன் ஒன்றை யோபுவிற்கு விளக்கிக் கூறுகிறார். என்ன அது? "கழுகு உயரத்திலே தன் கூட்டைக் கட்டுகிறது" என்று ஆம், கழுகுகள் உயரமான மரங்களிலும், உயரமான பாறைகளைக் கொண்ட மலைகளிலும் அதின் உச்சிகளிலும் தன் கூட்டை கட்டுகிறது. ஒரு சில பறவைகளைப் போல் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளியே வந்தவுடன் கூடுகளை விட்டுச் செல்லாமல், அதன் பழைய கூட்டின் மேலேயே புதிய கூட்டையும் அது கட்டுகிறது. **இரீ** என்ற ஓர் ஏரியில் (Lake Erie) அப்படி பழைய கூட்டின் மேலேயே புது கூட்டையும் கட்டின ஒரு கழுகின் பெரிய கூடு கிடைத்ததாம் அதின் எடை எவ்வளவு தெரியுமா? 4000 பவுண்டு (Pounds).

வேதாகமத்தில் மிகவும் துன்மார்க்கமாக வாழ்ந்த ஏதோமியர்கள் என்ற ஒரு கூட்ட ஜனம், பெரிய பாறைகளை கொண்ட மலைகளில் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் அங்கே இருப்பதினால் யாரும் தங்களை மேற்கொள்ளவும், முற்றுகையிடவும் முடியாது என நினைத்தனர். ஆனால் தேவன் அவர்களுக்கு என்ன கூறுகிறார் தெரியுமா? **"நீ கழுகைப் போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கே இருந்து உன்னை விழப்பண்ணுவேன்** என்று கூறினார் (எரேமி. 49:16) தேவனுக்கு பயந்து கீழ்ப்படிந்து நடப்பதே நல்லது, பாருங்கள்! இங்கே ஏதோமியருக்கு தேவன் என்ன எச்சரிப்பு தருகிறார். என்று, நாம் அவர்களைப் போல் இருக்கக்கூடாது.

கழுகுகளிடம் உள்ள மற்றொரு அதிசயம் அதன் சிறகுகள் (Wings) அவைகள் அழகாக வடிவமைக்கப்பட்டவைகள். அது கழுகுகளை நீண்ட நேரம் சிரமமில்லாமல் பறக்க உதவுகிறது. அதுவுமில்லாமல் உயரமாக பறக்கவும் உதவுகிறது. நீண்ட நேரம் பறக்கும் திறனை பெற்ற கழுகுகள் பற்றி



ஏசாயா தீர்க்கன் என்ன கூறுகிறார் பாருங்கள் (ஏசா 40:31) அவைகளின் சிறகுகள் 8முதல் 9அடி வரை நீளமானது. அதுபறக்க உதவும் முக்கியமான இறக்கை 20 அங்குலம் நீளமுடையது. அதினால் அவைகளால் உயரப் பறக்க முடிகிறது. மனிதன் கண்களால் பார்த்தவரை அவை 10,000 அடி உயரம் வரை பறந்துள்ளன. அதே போல் வேகமாகவும் பறக்கும் திறனுடையது. மணிக்கு 35 - 55 மைல் வேகத்தில் அவை சிறகடிக்காமல் காற்றில் மிதந்து பறக்கின்றன. ஆனால் அவை சிறகடித்து பறக்கும் போது மணிக்கு 150 மைல் வேகத்தில் பறக்கின்றன.

கழுகுகளின் குஞ்சுகள் உடனே பறக்க முடியாதவை. எனவே அதை அவைகள் பறக்க அப்பா கழுகும் அம்மா கழுகும் கற்றுத்தருகின்றன. பலவாரங்கள் கழித்து தான் அவை பறக்க பழகுகின்றன. தேவன் ஒரு முறை தம் ஜனமாகிய இஸ்ரவேலை பார்த்து என்ன கூறுகிறார் தெரியுமா? படியுங்கள் யாத் 19:4 இங்கே **"உங்களை கழுகு தன் குஞ்சுகளை சுமப்பது போல் உங்களை சுமந்தேன்"** என்கிறார். பாருங்கள்! தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது என்று!!

இன்னொரு அதிசயம் அவைகளின் பார்வை. கழுகு தன் இரையை தூரத்திலிருந்து பார்கின்றன. இதை குறித்து வேதம் என்ன கூறுகிறது யோபு : 39:28,29 ஐ வாசியுங்கள்! அதின் பார்வை மிகவும் வியக்கத்தக்கது. அது தண்ணீரின் உள்ளிருக்கும் மீனை 3 மைல் உயரத்திலிருந்து கண்டு கொண்டு அதை பிடிக்குமாம். அப்படிப்பட்ட பார்வை நமக்கு இருக்குமானால் நாம் எதையாகிலும் படிக்க நினைத்தால், எதை படிக்க வேண்டுமோ அதிலிருந்து அரை மைல் தூரம் முன்பாக நின்றே படித்துவிடலாம்!!

மேலும் இவை நீண்ட ஆயுள் உள்ளவை. பொதுவாக 50 வருடங்கள் வரை கூட உயிர்வாழுமாம். வேதமும் இதைப் பற்றி கூறுகிறது வாசியுங்கள் சங். 103:5.

இப்படிப்பட்ட பறவைகளை படைத்த தேவனுக்கு நன்றிகளை கூறுவோம். கழுகுகள் நம் தேவனின் ஞானத்தையும், வல்லமையையும் வெளிப்படுத்துகிறது. விளக்குகிறது! அப்படிப்பட்ட தேவனுக்கு நாம் பிரியமாய் இந்த சிறுவயதிலிருந்தே வாழ முயற்சி செய்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**R.A.R.Nayagam**

# நாளும் நடப்பும்

- கடந்த மாதம் அமெரிக்காவில் ஏற்பட்ட கேத்ரீனா என்ற சூறாவளியின் கோரத்தாண்டவம் கடந்த ஆண்டின் சுனாமிக்கு இணையான சேதத்தை விளைவித்துள்ளதாம்.
- இந்தியாவின் சரப்ஜித்சிங்கிற்கு, மரண தண்டனை வழங்கி பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.
- நடிகர் விஜயகாந்த் புதிய அரசியல் கட்சி தொடங்கியுள்ளார்.
- ஆறு அதிநவீன நீர்மூழ்கி கப்பல்களை பிரான்சிடம் இருந்து இந்தியா வாங்குகிறது.
- அமெரிக்க ஓபன் ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ரோஜர் பெடரர் மீண்டும் வென்றார்.
- ஆஷஸ் கோப்பையை இங்கிலாந்து கிரிக்கெட் அணி பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலியாவிடம் இருந்து மீட்டு சாதனை புரிந்திருக்கிறது.
- தேர்தலுக்கு தயராகுமாறு தமிழக காங்கிரசாரை அதன் தலைவர் வாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- இந்தியாவும், பாகிஸ்தானும் சிறைகளில் வாடிய 500 சிறைக்கைதிகளை பரிமாற்றம் செய்து கொண்டன.

## ***<u>கர்த்தருடைய வார்த்தையின் நன்மைகள்</u>***

**(சங்கீதம் 119 லிருந்து......)**

1. *நமது வழிகளை சுத்தப்படுத்துகிறது (9,101)*
2. *பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது (11,101)*
3. *ஊக்கப்படுத்துகிறது (14,16,25,28,35,70,77,92,93,149)*
4. *தேவ பயத்தை தருகிறது (38)*
5. *நம்பிக்கை அளிக்கிறது (43,49-50,74,81,114,147)*
6. *நன்றியுணர்வை தருகிறது. (62)*
7. *ஞானத்தை கொடுக்கிறது (98,100,104)*
8. *வழி நடத்துகிறது (24,105,130,155)*
9. *ஜீவனளிக்கிறது (25,37,40,88,107,149,159)*

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் ஏற்கனவே கற்றுக்கொண்ட பாடங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையினாலும், நமக்காக அவர் தம்மை முற்றிலும் தாழ்த்தி பாடுபட்டதினாலும், இரத்தம் சிந்துதலினாலும் நமக்கு சிறந்த நண்பரானார் என்று பார்த்தோம். இனி அநேக வசனங்கள் மூலமாக இயேசு கிறிஸ்துவினுடைய மரணத்தைப் பற்றியும், அவர் சிந்தின இரத்தத்தைப் பற்றியும் படிப்போம்.

யோவான் 1:29யை வாசியுங்கள் இந்த வசனங்களில் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இயேசு என்று பார்க்கிறோம். இயேசு தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததன் நிமித்தமாக உங்கள் பாவங்களும், என் பாவங்களும் நீங்க சாத்தியமாக்கினார். எனவே தான் இயேசு நம்முடைய உண்மையான நண்பர்.

எபிரெயர் 2:9ல் நாம் வாசிக்கும்போது தேவனுடைய கிருபையினால் நம்முடைய சிறந்த நண்பர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்.

1தீமோ 2:6யை வாசித்தால், எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து என்று நாம் பார்க்கிறோம். இயேசு நம்முடைய பாவங்களுக்காக ஒரு மிருகத்தையோ அல்லது மிருக இரத்தத்தையோ பலியாக கொடுக்கவில்லை. ஆனால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்கும்படி தம்மையே கிரயமாக ஒப்புக்கொடுத்தார். நமக்காக இயேசு எவ்வளவு பெரிய கிரயத்தை செலுத்தினார் என்று பாருங்கள்!.

கலாத் 1:4ல் நாம் வாசிக்கும்போது அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி தம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.

கலாத் 2:20யை வாசியுங்ள். இங்கே பவுல் இயேசு தன்னில் அன்பு கூர்ந்ததையும், தனக்காக இயேசு தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்ததையும் மறக்கவில்லை. நீங்களும், நானும் இந்த உண்மை நம்முடைய மனதிலிருந்து மறைந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

எபிரெயர் 7;26,27ல் நாம் வாசிக்கும்போது, பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார் அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை. ஏனெனில், தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார்.

1கொரி 5:7யை வாசியுங்கள் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. “பஸ்கா” என்கிற வார்த்தையின் முக்கியத்துவத்தை சற்று சிந்தியுங்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்தபோது தேவன் அவர்களிடம் பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டியை பலியிட்டு அதின் இரத்தத்தை எடுத்து வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள் என்று கட்டளையிட்டார்.

எதற்காக யெகோவா இஸ்ரவேலர்களை அப்படிச் செய்யும்படி கட்டளையிட்டார்? ஏனென்றால், கர்த்தர் எகிப்தியரை அதம் பண்ணுகிற தற்குக் கடந்து வருவார், அப்போது வாசல் நிலைக்கால்களிலும், மேற் சட்டத்திலும் தெளிக்கப்பட்டிருக்கும் இரத்தத்தைக் காணும் போது கர்த்தர் சங்காரக்காரனை அவர்கள் வீடுகளில், அவர்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல் வாசற்படியை விலகிக் கடந்துபோவார். இந்த பின்னணி தகவல்களை மனதில் கொண்டு இயேசு நமக்கு பஸ்கா என்ற பதத்தில் உள்ள ஆவிக்குரிய முக்கியத்துவத்தை கவனியுங்கள். **இயேசுவினுடைய வல்லமையான இரத்தத்தினால் நாம் கழுவப்பட்டோமானால் ஆவிக்குரிய மரணம் நம்மை விட்டு கடந்து போகும்,** நாமும் இயேசுவோடும், பிதாவோடும், பரிசுத்த ஆவியோடும், மீட்க்கப் பட்டவர்களோடும் நாம் நித்தியத்தை செலவு செய்வோம். நம்முடைய பஸ்காவாகிய இயேசு நமக்கு எவ்வளவு அருமையான நண்பர் பாருங்கள்!

1பேதுரு 2:24யை வாசியுங்ள். இயேசு தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அப்படி செய்ததினால் இயேசு நாம் ஆவிக்குரிய ரீதியில் குணமடைய வாய்ப்பு ஏற்படுத்தினார். இந்த வசனங்களில் தேவன் சொல்கின்ற காரியங்களை கவனமாகக் கவனியுங்கள் ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை, நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். அதுமாத்திரமல்ல, இயேசு ஒரு நல்ல மேய்ப்பனாக தம்முடைய ஆடுகளுக்காக தம் ஜீவனையே விட்டார். ஒவ்வொருவருக்காக மரணத்தை ருசிபார்த்த தேவ ஆட்டுக்குட்டி அவரே. நம்முடைய உண்மையும் இரக்கமுள்ள மகாபிரதான ஆசாரியர் பரிசுத்தமானவர், தீங்கில்லாதவர், பாவங்களிலிருந்து தம்மை விலக்கிக் காத்துக் கொண்டவர். நம்முடைய பாவங்களுக்காக மிருக இரத்தத்தை பலியாக செலுத்தாமல் தம்முடைய இரத்தத்தையே சிந்தினவர். நம்முடைய பஸ்காவாகிய இயேசு நமக்காக பலியிடப்பட்டார். நம்முடைய பாவங்களை அவர் தம்முடைய சரீரத்தில் சுமந்தார், அவருடைய தழும்புகளால் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக குணமாகிறோம்.

இயேசு தம்முடைய மரணத்தினாலே நமக்கு சிறந்த நண்பர் என்பதை நிரூபிக்கிறார்.

எபிரெயர் 9:22-28ல் நாம் வாசிக்கும்போது அவருடைய இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் உங்களுக்கும், எனக்கும் பாவ மன்னிப்பு இல்லை என்பது நிச்சயமாகிறது.

யோவான் 19:34ல் நாம் வாசிக்கும்போது போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான், உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது.

எபிரெ 9:12-14ல் நாம் வாசிக்கும்போது வெள்ளாட்டுக்கடா இளங்காளை, இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனசாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

மத்தேயு 26:28ல் நாம் வாசிக்கும்போது பாவமன்னிப்புக்காக சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் புதிய உடன்படிக்கையின் இரத்தமாயிருக்கிறது.

வெளி 1:5ல் நாம் வாசிக்கும்போது இயேசு நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய திருஇரத்தத்தால் நம்முடைய பாவங்களைக் கழுவினார்! அப் 22:16ல் நாம் வாசிக்கும் போது நாம் முழுகி ஸ்நானம் பெறும்போது நம்முடைய பாவங்களை அவர் கழுவுகிறார்.

எபே1:7யை வாசியுங்கள் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. இந்த வசனத்தைக் கவனமாகப் படியுங்கள் அந்த பாவமன்னிப்பும், மீட்பும் நமக்கு எங்கே உண்டாயிருக்கிறது? நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போதுதான் அந்த பாவமன்னிப்பும், மீட்பும் நமக்கு உண்டாகிறது. நாம் புதிய ஏற்பாட்டில் பார்க்கும் போது நாம் கிறிஸ்துவுக்குள்ளாக வருவதற்கு ஒரே வழி கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவது தான் (ரோமர் 6:34; கலா 3:27)

1பேதுரு 1:18,19யை வாசியுங்கள் இங்கே மறுபடியும் ஒருமுறை மீட்பு என்கிற வார்த்தை வருகிறது. பிரியமானவர்களே நம்முடைய மீட்பு அழிவுள்ள வஸ்துக்களாகிய பொன், வெள்ளி போன்றவற்றால் அல்ல என்கிற உண்மையினால் நீங்கள் பரவசப்படுகிறீர்களா?

கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்படுகிறார்கள். இங்கே இயேசு கிறிஸ்துவை தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுரு எப்படி விளக்குகிறார்? குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி! இயேசு கிறிஸ்து தேவ ஆட்டுக்குட்டி என்பதிலும் நமக்காக பலியிடப்பட்ட பஸ்கா என்பதிலும் ஏதாவது சந்தேகம் இருக்கமுடியுமா? மேலும் நமக்கு இருக்கிற சிறந்த நண்பர் இயேசு என்பதிலும் ஏதாவது சந்தேகம் இருக்க முடியுமா?.

எபிரெயர் 10:19,20 வசனங்களில் நாம் பார்க்கும் போது நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு **அவருடைய இரத்தத்தினாலே** நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது என்று வாசிக்கிறோம்.

எபிரெயர் 13:20யை வாசியுங்கள் பழைய உடன்படிக்கையானது மிருக இரத்தத்துடன் சம்பந்தப்பட்டது. ஆனால், இயேசுவின் நித்திய உடன்படிக்கையானது ஆத்துமாவை சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தம் சம்பந்தப்பட்டது. இவைகளெல்லாம் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை விட சிறந்தது அல்லது மேலானது என்பதைக் காட்டுகிறது.


அப். 20:28யை நாம் வாசிக்கும் போது இயேசு தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை என்று பார்க்கிறோம். இது நம்முடைய அருமை இரட்சகர் தம்முடைய ஒரே மெய்யான ஆவிக்குரிய சரீரத்தின் மீது வைத்திருக்கும் மாபெரும் மதிப்பை நமக்கு காட்டுகிறது. அதுமாத்திரமல்ல இந்த வசனமானது அப்படிப்பட்ட சபையில் நாம் அங்கத்தினராவது எவ்வளவு நித்திய முக்கியம் என்பதையும் நமக்குச் சொல்கிறது.

ரோமர் 5:9-11யை வாசியுங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் அவருடைய இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். மேலும் நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் கிறிஸ்து மூலமாக தேவ கோபாக்கினைக்கு தப்பித்துக் கொள்வோம். நாம் மனமாற்றம் அடைவதற்கு முன்பு தேவனுக்கு சத்துருக்களாய் இருந்தோம். நாம் ஞானஸ்நானத்துடன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தபோது இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம். நாம் கிறிஸ்துவினால் தேவனோடு ஒப்புரவாகிறது மாத்திரமல்ல அவருடைய ஜீவனால் இரட்சிக்கப்படுகிறோம். இப்படிப்பட்ட அருமையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக தேவனுக்குள் நம்மை களிகூரச் செய்கிறது. ஏனென்றால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம்.

கொலோ 1:20ல் நாம் வாசிக்கும் போது, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் என்று வாசிக்கிறோம். நம்முடைய அருமை மீட்பருக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவரும் அவர் மூலமாக தேவனிடத்தில் ஒப்புரவாக்கப்படுகிறார்கள். இயேசு நமக்கு எவ்வளவு அருமையான நண்பர் என்று பாருங்கள்!

அடுத்த மாதம் இயேசு நமக்கு எப்படி சிறந்த நண்பராயிருக்கிறார் என்பதற்கான நான்காவது காரணத்தைப் பற்றிப்படிக்கலாம் அதற்கு இடைப்பட்ட காலத்தில் நமக்காக மரித்தவருக்காக நாம் ஒவ்வொருவரும் வாழ்வோம்.

**பென்னி** **சார்லி டிபால்மா.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு


# ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.



திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.

## ராஜ் டிவி யில்


## திருமறை தியானம்

பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணி

## தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்

பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி





Published by Church of Christ, Kangayam.

Editor. S. Rajanayagam.

Design & Printed at : Sun Offset Printers, Kangayam-638 701. Ph : 04257 - 222555,224555